# 1 மதிப்பும் மரியாதையும்

பழநியப்ப செட்டியார் இப்படிச் செய்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அதிகாலை நேரம். என் வீட்டின் ஸிட் அவுட்டில் உட்கார்ந்துகொண்டு 'இந்து' நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் கார் ஒன்று நுழையும் ஓசை கேட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தேன்.

பழநியப்ப செட்டியாரின் மூத்த புதல்வன் செந்திலும், அவன் மனைவி சேதுக்கரசியும் இறங்கி வந்தவர்கள்-வந்ததும் வராததுமாக அந்தச் செய்தியைத்தான் சொன்னார்கள்.

செட்டியார் தன் மனைவி மக்களுடன் கோபித்துக் கொண்டு போய்விட்டாராம். போனவர் பெரியநாயக்கன் பாளையத்திலுள்ள முதியோர் இல்லம் ஒன்றில் சேர்ந்து விட்டாராம். "இங்கே இருக்கிறேன். என்னைத் தேடி வந்து மானத்தை வாங்க வேண்டாம் என்பதற்காகத் தகவல் மட்டும் சொல்கிறேன்' என்றும் சொன்னாராம்.

வந்தவர்களை நோக்கி நான் கேட்டேன்.

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும்......?"

"அவர்களைத் திரும்ப வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வர வேண்டும். அது உங்களால் தான் முடியும்!"

நம்பிக்கையோடு சொன்னார்கள்.

"சரி, வாருங்கள் போகலாம்" என்று சொல்லி உடைகளை மாற்றிக் கொண்டு அவர்களோடு கிளம்பி விட்டேன்.

பழநியப்ப செட்டியாருக்கும் எனக்கும் உள்ள நட்பு இளையராஜாவிற்கும் இசைக்கும் உள்ளது போன்று ஆத்மார்த்தமானது.

அவருக்கு வயது அறுபத்தைந்து. எனக்கு ஐம்பது. இருந்தாலும் வயது வித்தியாசம் பார்க்காத அப்படியொரு நட்பு.

வாரம் இரண்டு முறையாவது அவர் என்னை வந்து பார்க்காமல் இருக்க மாட்டார். அவர் எப்போதாவது தன் மனக் குறைகளைச் சொல்லும்போது நான் சமாதானம் சொல்லி அனுப்பி வைப்பேன்.

"அண்ணே! ராஜாவாக இருந்தால் கண்களை மூடிக்கொள்ள வேண்டும். வேலைக்காரனாக இருந்தால் காதுகளை மூடிக்கொள்ள வேண்டும் வயதாகி விட்டால் இரண்டையும் மூடிக்கொள்ள வேண்டும்- அப்போதுதான் நிம்மதியாக இருக்கமுடியும்" என்பேன்.

"உன்னால் முடியும் முருகப்பா! என்னால் முடியவில்லையே!" என்பார்.

"நீங்கள் அந்தக் காலத்தில் சைக்கிளில் போய்ச் சம்பாதித்ததை உங்கள் பிள்ளைகள் இப்போது காரில் போய் செல்போன்களில் பேசிச் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் செய்யும் செலவுகள் எல்லாம் அவர்களுக்கு நியாயமாகத் தெரியும். அதுவே உங்களுக்கு வீணானது எனத் தெரியும். எடுத்துச் சொன்னால் கேட்டுக் கொள்ள மாட்டார்கள். மன வருத்தம்தான் வரும். ஆகவே கண்டு கொள்ளாமல் இருங்கள்" என்பேன்.

"இல்லை, முருகப்பா! வயதானால், அதுவும் வீட்டில் சும்மா இருந்தால்- மதிப்பும் மரியாதையும் இல்லை- எங்காவது போய்விட வேண்டும்" என்பார்.

"எல்லாவற்றையும் உங்களைக் கேட்டுச் செய்ய வேண்டும். நடந்தவற்றை எல்லாம் உங்களிடம் கூற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள். காலத்தின் பரிணாம வளர்ச்சியில் வேகமான இன்றைய யுகத்தில்- அதெல்லாம் சாத்தியமில்லை. உங்களுக்கு பெர்சனலாக ஏதாவது குறை வைத்தார்களா சொல்லுங்கள்? அதாவது உண்ணும் உணவு, உடுத்தும் உடைகள், இருக்கும் இடம்- இதில் ஏதாவது குறையுள்ளதா சொல்லுங்கள்! சரி பண்ணுவோம்" என்பேன்.

“எந்தச் சூழ்நிலையிலும் உன் சுதந்திரத்தையும், தன்மானத்தையும் விட்டுக் கொடுக்காதே’ என்று விவேகானந்தர் கூறியிருப்பதாகச் சொல்வாயே- அது இரண்டும் இல்லை என்றால் பரவாயில்லை என்கிறாயா?”

“குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை’ யென்று ஔவையார் சொன்னதையும் சொல்லியிருக்கிறேன். அதை மறந்து விட்டீர்களே” என்று இடைமறிப்பேன்

“உன்னோடு பேசி வெற்றி பெற முடியாது!” என்று எழுந்து விடுவார்.

பிறகு அடுத்தமுறை வரும்போது சரியாகி விடுவார். இதுதான் நடந்து கொண்டிருந்தது. மன உளைச்சல் அதிகமாகிவிட்டதோ என்னவோ- வடிகால் தேடி இப்போது வீட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார்.

காரில் போகும்போது சிந்தித்துக் கொண்டே போனேன். அவரிடம் இப்போது என்ன பேச வேண்டும்- என்ன பேசக்கூடாது என்பதைத் தெளிவு படுத்திக் கொண்டேன்.

பத்து ஏக்கர் பரப்பளவில் அந்த முதியோர் இல்லம் இருந்தது. ஒழுங்காக முறையாகக் கட்டப்பட்ட கட்டடங்கள். உடன் வந்த இருவரையும் காரிலேயே இருக்கச் சொல்லிவிட்டு நான் மட்டும் உள்ளே போனேன்.

விசாரித்துத் தெரிந்து கொண்டு பழநியப்ப செட்டியாரின் அறைக்குள் நான் சென்ற போது அவர் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்

“வா, முருகப்பா,..சாப்பிடுகிறாயா?’ என்றார்

“ இல்லை அண்ணே, நீங்கள் முடித்துவிட்டு வாருங்கள். நான் காத்திருக்கிறேன், என்று கூறிவிட்டுக் கையில் கொண்டு போயிருந்த நாளிதழில் மூழ்கினேன்.

பத்து நிமிடங்களில் கையைக் கழுவிக் கொண்டு அவர் வந்தார். வந்தவர் சொன்னார்.

“உன்னை எதிர்பார்த்தேன்!”

“என்ன எதிபார்த்தீர்கள்?’ என்றேன்.

“எங்கள் வீட்டில் பஞ்சாயத்திற்கு உன்னைத்தான் அனுப்புவார்கள் என்று எனக்குத் தெரியும்” என்றார்.

“நான் அதற்கு வரவில்லை!” என்று அதிரடியாகச் சொன்னேன். நான் மேலே பேசட்டும் என்று ஒன்றும் பதில் சொல்லாமல் அவர் என்னையே நோக்கினார்.

அதிரடிப் பேச்சைத் தொடர்ந்தேன்.

“என்னையும் இங்கே சேர்த்துக் கொள்ளச் சொல்லுங்கள். எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று கேட்டுச் சொல்லுங்கள்”

“நீ எதற்காகச் சேர வேண்டும்?” அவர் குறுக்கே கேட்டார்.

“நிரந்தரமாக இல்லை. ஒரு பதினைந்து நாட்கள் மட்டும் தங்க வேண்டும். ஏற்பாடு செய்யுங்கள்.” என்றேன்.

“அது தான் எதற்கு?” என்றார்

நான் சற்று குரலைத் தாழ்த்தி- அழுத்தந் திருத்தமாகச் சொன்னேன்.

“உங்களுக்கு வீட்டில் கிடைக்காத மதிப்பும் மரியாதையும் இங்கே கிடைக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே தினமும் உங்களைக் கேட்டுத்தான் சமையல் செய்கிறார்களா- சாப்பாடு போடுகிறார்களா என்று தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் உங்களுக்குத் தொகுத்துச் சொல்கின்றார்களா என்று தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்ரையும் விட முக்கியமாக உங்களுக்கு என்னைப் போன்று ஒரு ஆத்மார்ந்தமான நண்பன் கிடைக்கிறானாவென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்”

சம்மட்டியால் அடித்ததுபோல் இருந்ததோ என்னவோ செட்டியார் மனதால் நொருங்கிப் போய் விட்டார்.என் கைகளைப் பிடித்துக் கொண்டு அழத் தொடங்கிவிட்டார். உணர்ச்சிப் பிழம்பாகி விட்டார்.

வழக்கம்போல சமாதானப்படுத்தினேன்.

அடுத்த முப்பது நிமிடங்களில் அந்த அறையைக் காலி செய்துவிட்டு- அவர் செலுத்தியிருந்த பணத்தை அந்த

விடுதிக்கே தர்மமாக வைத்துக் கொள்ளச் சொல்லி எழுதிக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார். எல்லோரும் கோவைக்குத் திரும்பி வந்து சேர்ந்தோம்.

வந்த கையோடு அவரை நன்னெறிக்கழகம், நகரத்தார் சங்கம், சன்மார்க்க சங்கம், கம்பன் கழகம், கவிஞர் கண்ணதாசன் நற்பணி மன்றம், வைரமுத்து பேரவை போன்ற பல இலக்கிய, ஆன்மிக அமைப்புக்களில் உறுப்பினராகச் சேர்த்துவிட்டேன்.

அவரும் இப்போது உற்சாகமாகப் போய் வந்து கொண்டிருக்கிறார். அவர் தேடிய மதிப்பும் மரியாதையும் இப்போது அவரைத் தேடி வந்து கொண்டிருக்கின்றன!

# 2 தந்தி மீனி ஆச்சி

தந்தி மீனி ஆச்சி வழக்கத்திற்கு மாறாகக் கலக்கத்துடன் காணப்பட்டார். என் தந்தையிடம் வந்ததும் வராததுமாகக் கடுகடுப்போடு சொல்லிக் கொண்டிருந்தார்.

"இராமசாமி அண்ணே, கேட்டீயளா இந்த அநியாயத்தை! இன்னிக்குச் சாயந்திரம் நடக்கப்போகும் மகாசபைக் கூட்டத்தில் அந்தக் கோடி வீட்டு ராமஞ்செட்டி தீர்மானம் கொண்டு வரப்போகிறாராம்."

"என்ன தீர்மானம்?" என் தந்தையார் நிதானமாகக் கேட்டார்.

"என்னை இந்த ஊரைவிட்டு இரண்டு வருஷமாவது தள்ளி வைக்க வேண்டுமாம்!"

"கவலைப்படாதே மீனா! நான் பார்த்துக் கொள்கிறேன். நீ யாரிடமும் ஒன்றும் பேசாதே. போய்ப் பேசாமல் வீட்டில் இரு." என்று கண்டிப்புடனும், நம்பிக்கையுடனும் சொன்னவர், மீனி ஆச்சியை எங்கள் வளவில் உள்ள மற்றவர்கள் விசாரிக்கும் முன்பு அனுப்பி வைத்தார்.

அடுத்த வீடுதான் மீனி ஆச்சியின் வீடு. அவரும் உடனே போய் விட்டார்.

எங்கள் ஊரில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் மகாசபைக் கூட்டம் இன்று மாலை நகரச் சிவன் கோவிலில் நடக்க உள்ளது.

ராமஞ்செட்டியாரும் பேசப்போகின்றார், என் தந்தையாரும் பேசப் போகின்றார் என்றால் அது சுவாரசியமாக இருக்கும், நாமும் போக வேண்டும் என்று முடிவு செய்தேன்.

தந்தி மீனி ஆச்சி எங்கள் ஊரில் மிகவும் புகழ் பெற்றவர். அவரை ரேடியோ மீனி ஆச்சி என்பார்கள்.

‘தில்லானா மோகனாம்பாள்’ படத்தில் வரும் மனோரமாவை நினைத்துக் கொள்ளுங்கள் - மீனி ஆச்சியும் அசப்பில் அப்படியேதான் இருப்பார். அதே மாதிரிதான் பேசுவார். செட்டிநாட்டுத்தொனி சிறப்பாக இருக்கும்.

1960ஆம் ஆண்டு பாகப்பிரிவினை படம் வந்து சக்கைப்போடு போட்டுக்கொண்டிருந்த காலம்.

நான் அழகப்பாவில் பட்டப்படிப்பு இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மீனி ஆச்சிக்கு வயது 45. ஆனாலும் முப்பது வயசுக்குள்ள கேலியும் கிண்டலும் அவரது பேச்சில் மிகுந்திருக்கும்.

“மீனி ஆச்சி ஏதாவது செய்தி உண்டா?” என்று வம்புக்கு இழுத்தால், உடனே பட்டென்று சொல்வார்.

“படிச்சுப் பாஸாகிற வேலையைப் பார் அப்பச்சி! நாட்டுச் செய்தியை எல்லாம் கேட்கிற வயசா உன் வயசு?”

ஒரு செய்தி மீனி ஆச்சிக்குத் தெரிந்தால் போதும் அன்று மாலைக்குள் ஊர் முழுக்கத் தெரிந்துவிடும். அதுவும் ‘யாரிடமும் சொல்லாதீர்கள்’ என்று சொல்லிவிட்டால் போதும். அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் அது ஊர் முழுக்கத் தெரிந்துவிடும்.

எங்கள் ஊரில் மொத்தம் எண்ணூறு புள்ளிகள். அத்தனை பேர்களைப் பற்றிய விபரங்களும் மீனி ஆச்சிக்கு அத்துபடி. அதுமட்டுமல்ல எங்கள் ஊருக்கு அருகிலுள்ள மற்ற நகரத்தார் ஊர்களிலும் மீனி ஆச்சியைத் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள்.

மீனி ஆச்சி செய்தி சேகரிக்கும் விதமே அலாதியானது. பெரும்பாலும் நகரச்சிவன்கோவில், ஊருணிக்கரை, திருமண, சாந்திக்கார வீடுகள் போன்ற இடங்கள்தான் அவருடைய செய்திக்களங்கள். மாமியாரைப் போகவிட்டு மருமகளை மடக்குவார். அப்பச்சியைப் போகவிட்டு மகனை மடக்குவார். அண்ணனைப் போகவிட்டுத் தம்பியை மடக்கிப் பேசுவார். எப்படியோ அவருக்கு செய்திகள் கிடைத்துவிடும். சில இடங்களில் நேர்காணலும் செய்துவிடுவார்.

அவருக்குக் கல்யாணமாகி இரண்டாவது ஆண்டு அவருடைய கணவர் வெளியூர் போனவர் போனவர்தான். இன்றுவரை திரும்பவில்லை. அவர்களுக்கு ஒரே ஒரு பையன். அதைவிற்று, இதைவிற்று எப்படியோ அவனைப் பள்ளி இறுதி வகுப்புவரை படிக்க வைத்துவிட்டார். அவனுக்குச் சென்னையில் ஒரு பதிப்பகத்தில் வேலை. திருமணமாகிவிட்டது. கைக்கும் வாய்க்குமான சம்பளம். வாழ்க்கைப் போராட்டம். அவன் ஊருக்கே வருவதில்லை.

காலையில் எழுந்து குளித்துவிட்டுச் சிவன் கோவிலில் போய் ஒரு மணி நேரம் பொழுதைப் போக்கிவிட்டு, அங்கேயே அருகில் இருக்கும் கூடைக்காரப் பெண்களிடம் இரண்டு கட்டுக் கீரையை வாங்கிக் கொண்டு நகர்வலம் கிளம்பி விடுவார்.

முதல் கீரைக்கட்டை ஒரு வீட்டில் கொடுப்பார். அங்கே சாப்பிடச்சொல்வார்கள் - காலைப்பலகாரம் முடிந்துவிடும். அடுத்த கீரைக்கட்டிற்கு மதியம் ஒரு வீட்டைப் பிடித்து விடுவார். இரவிற்குச் சிவன் கோவில் கட்டளைக்காரர்கள் புளியோதரை, சர்க்கரைச்சாதம் என்று கொடுத்து விடுவார்கள். சமையல் வேலையெல்லாம் அவருக்கு இல்லை.

தேன் குழல், மாவுருண்டை, சீப்புச்சீடை என்று வீடுகளில் பலகாரம் செய்யும் ஆச்சிமார்கள் ஆள் அனுப்பி மீனி ஆச்சியை உதவிக்குக் கூட்டிக் கொள்வார்கள். காரைக்குடிக்குச் சாமான்கள் வாங்கப்போகும் ஆச்சிமார்களும் இவரைத்தான் கூட்டிக் கொள்வார்கள். பத்து இருபது கொடுப்பார்கள். அதுதான் அவருடைய வருமானம்.

அவரால் பிரிந்த குடும்பங்களும் உண்டு.. ஒன்று சேர்ந்த குடும்பங்களும் உண்டு. திருமணமாகிப்போன பெண்களும் உண்டு. மருமகள்களாக வந்த பெண்களும் உண்டு.

ஒரே ஒரு அசத்தலான விஷயம்-இவ்வளவு கஷ்டத்திலும் அவர் மிகவும் நேர்மையானவர். நாணயமானவர். காசு விஷயத்தில் ஒரு பத்து பைசாக்கூட அடுத்தவர் பணத்திற்கு ஆசைப்படமாட்டார்.

❖❖❖❖❖

நகரச்சிவன் கோவிலில் அலங்கார மண்டபம். மாலை மணி ஆறு. கூட்டம் தொடங்கியது. மொத்தம் முன்னூறு பேர் வந்திருந்தார்கள்.

காரியக்காரர் வரவேற்புரை ஆற்றி, நிதிக்கணக்கைச் சமர்ப்பித்தார். பிறகு ஆற்ற வேண்டிய பணிகளைப்பற்றி விவாதித்தார்கள்..முடிவு எடுத்தார்கள். தீர்மானங்களை எழுதிக்கொண்டார்கள்.

கடைசியாகக் காரியக்காரர் 'வேறு ஏதாவது உள்ளதா?' என்று கேட்டதுதான் தாமதம், ராமஞ்செட்டியார் எழுந்து நின்று தீர்க்கமாகச் சொன்னார்.

"தந்தி மீனி ஆச்சியின் தொல்லை பெரிய தொல்லையாக உள்ளது. மகாசபை அதற்கு ஏதாவது முடிவு கட்ட வேண்டும்!"

'ஆமாம், ஆமாம்' என்று நான்கைந்து குரல்கள் ஒன்று சேர்ந்து ஒலித்தன.

காரியக்காரர் கேட்டார், "நாம் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?"

ராமஞ்செட்டியார் சொன்னார்., "ஒரு மூன்று ஆண்டுகளாவது ஆச்சியை ஊரைவிட்டுத் தள்ளி வைக்க வேண்டும்!

"எல்லோரும் ஒரு மனதாக ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார் காரியக்காரர்.

உடனே என் தந்தையார் எழுந்து சொன்னார்.

"தள்ளிவைப்பது என்பது மிகவும் கடுமையான செயல். ஒழுக்கமில்லாமல் நெறிகெட்டுப் போயிருந்தால் மட்டுமே அப்படிச் செய்யலாம். ஆச்சி மேல் உள்ள குற்றம் என்ன யோசித்துப் பாருங்கள். அடுத்தவர் வீட்டு விஷயங்களை அவர் பேசிக்கொண்டு திரிவது குற்றம் என்றால் ஊரில் உள்ள நாம் அனைவரும் காலம் காலமாக அவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமே - அது குற்றமில்லையா? அடுத்த வீட்டு விஷயங்களைக் கேட்பதில்லை, அவற்றில் நமக்கு ஆர்வமில்லை என்ற நிலை இருந்தால் அவர்

எப்படிப் பேசுவார்? ஆகவே நாம் அவரிடம் சேதிகள் கேட்பதை முதலில் நிறுத்த வேண்டும். இரண்டாவதாக அவர் பேச்சுக்களால் பாதிக்கப்படுவதை மட்டுமே சொல்கிறீர்கள். இருக்கலாம்.ஆனால் அவரால் எவ்வளவு நன்மைகளை நாம் அடைந்திருக்கிறோம். எவ்வளவு திருமணங்கள் அவரால், அவர் கூறிய மேன்மையான பரிந்துரைகளால் முடிந்திருக்கிறது. அதை எல்லோரும் நினைத்து பாருங்கள்!

இப்போது ராமஞ்செட்டியார் குறுக்கிட்டார், "அவரால் நன்மையும் வேண்டாம். தீமையும் வேண்டாம். அவர் பேசாமல் இருக்க வேண்டும். அதற்கு ஏதாவது வழியிருக்கிறதா? சொல்லும்!"

என் தந்தையார் அதிரடியாகச் சொன்னார் "இருக்கிறது!"

சபையில் இருந்த அத்தனை தலைகளும் என் தந்தையாரை நோக்கித் திரும்பிப் பார்த்தன. பத்துப் பதினைந்து குரல்கள் ஒருமித்துக் கேட்டன, என்னவென்று சொல்லுங்கள்?

என் தந்தையார் தொடர்ந்தார்.

"மீனா தன் வறுமை காரணமாகவே வீடுவீடாகச் செல்கின்றார். வலியப்போய் பேசுகின்றார். நம் ஊரில் எவ்வளவோ தொழில் அதிபர்கள், மேதைகள் இருக்கிறீர்கள். யாராவது ஒருவர் அவருக்கு ஏதாவது ஒரு வேலை போட்டுக்கொடுங்கள்.பிரச்னை தீர்ந்துவிடும்!"

இப்போது நான்கைந்து பேர் எழுந்து நின்று, "ஆமாம் அதுதான் சரியான முடிவு என்றார்கள்"

என்ன ஆச்சர்யம் பாருங்கள். கூட்டத்திற்கு வந்திருந்த எங்கள் ஊரைச் சேர்ந்த நூற்பாலை அதிபர் ஒருவர் தான் அதைச்செய்வதாக ஒப்புக்கொள்ள பலத்த கைதட்டல்களுக்கிடையே கூட்டம் இனிதே முடிவுற்றது.

அந்த தொழில் அதிபர் தன் நூற்பாலையில் மீனி ஆச்சிக்கு மட்டும் இல்லை, அவருடைய மகனுக்கும் சேர்த்து வேலை போட்டுக்கொடுத்து விட்டார். அவர்கள் தங்குவதற்கு ஆலையின் குடியிருப்பில் இடமும் கொடுத்துவிட்டார்.

# 3 வாங்கி வந்த வரம்

எங்கள் ஊர் முழுக்க இதே பேச்சுத்தான். பாதிப் பேர் முதலில் நம்பவில்லை. உண்மையைத் தெரிந்து கொண்டவர்களுக்குத் திகைப்பாக இருந்தது.

இருக்காதா பின்னே?

இதுவரை ஒரு பத்து ரூபாய்கூட தான தர்மம் பண்ணித் தெரியாத கருப்பஞ் செட்டியார் திடீரென்று ஒரு கோடி ரூபாயை ஊர்ப் பொது நிதிக்குக் கொடுத்திருக்கிறாறென்றால் அது சாதாரணமான விஷயமா என்ன?

சச்சின் டெண்டுல்கர் ஓப்பனிங் பௌலராக மாறி முதல் மூன்று பந்துகளில் மூன்று விக்கட்டுகளைச் சாய்த்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது அந்தச் செய்தி!

மாவன்னா வீட்டுக் கல்யாணத்திற்காக ஊருக்கு வந்திருந்தேன். திருமண மண்டபத்தில் எல்லோரும் இதைத்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. இன்னும் எங்கள் வீட்டிற்குப் போகவில்லை. வீட்டிற்குப் போனால் முழு விபரமும் தெரிந்து கொள்ளலாம் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டேன்.

கருப்பஞ் செட்டியாருக்கு அறுபத்தைந்து வயது. எங்கள் ஊர் நகரத்தார் உயர்நிலைப் பள்ளியில் கருப்பஞ் செட்டியாரும் என் தந்தையாரும் ஒன்றாகப் படித்தவர்கள். அது மட்டுமில்லாமல் அவர் எங்கள் பங்காளி வேறு. எங்கள் தந்தையார் கருப்பஞ் செட்டியாரின் கஞ்சத்தனத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொல்வார்கள் - நாங்கள் அப்படியிருக்கக் கூடாது என்பதற்காக!

‘கஞ்சனுக்கும் கருமிக்கும் என்ன வித்தியாசம்?’ என்று ஒருமுறை என் தந்தையாரிடம் நான் கேட்டபோது அவர்கள் இப்படி விளக்கம் சொன்னார்கள்.

தன் வீட்டு மரத்தில் காய்க்கும் மாம்பழங்களைத் தன் வீட்டாரைத் தவிர வெளியாட்களுக்குக் கொடுக்காதவன் கஞ்சன். அதே பழங்களைத் தன் வீட்டாருக்கேகூடக் கொடுக்காமல் வெளியே விற்றுக் காசாக்கி மகிழ்பவன் கருமி!

கருப்பஞ் செட்டியார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தனக்கு சஷ்டியப்தபூர்த்தி சாந்தி வந்த போது கூட - சொந்த பந்தங்களுக்கெல்லாம் வேஷ்டி, சேலை வாங்க வேண்டும், வைதீகச் செலவு, விருந்துச் செலவு என்று பத்து லட்சம்வரை செலவாகுமே என்ற ஒரே காரணத்திற்காகச் சாந்தியே செய்து கொள்ளவில்லை. சுவாமி மலைக்குப்போய் சுவாமி தரிசனம் பண்ணிவிட்டுத் திரும்பிவிட்டார்.

இன்றைக்குத் தேதியில் அவருக்குப் பத்துக் கோடி ரூபாய்க்குமேல் சொத்துத் தேறும். மதுரை, காரைக்குடி இரண்டு ஊர்களிலும் கட்டட வாடகையே மாதம் ரூபாய் இரண்டு லட்சத்திற்குமேல் வந்து கொண்டிருக்கிறது. கொடுக்கல், வாங்கல் வியாபாரத்திலும் மாதாமாதம் அதைவிட அதிகமாகப் பணம் வந்து கொண்டிருக்கிறது.

ஆனாலும் மிகவும் சிக்கனமானவர். பார்வைக்குப் பழைய நடிகர் எஸ்.வி. சுப்பையா மாதிரி இருப்பார். துவைத்துக் கட்டிய வேஷ்டி, சட்டை. கையில் மஞ்சள் பை. காலில் ரப்பர் செருப்பு. அதிகம் பேச மாட்டார்.

எங்கள் ஊர் எல்லையில் ஒரு தோப்பு வீட்டில் குடியிருக்கிறார். தோப்பு வீடு என்பதனால் எல்லாம் வசதி. காய்கறி, பால் என்று எதற்குமே வெளியே எட்டிப் பார்க்க வேண்டாம். ஊரின் மத்தியில் உள்ள வளவு வீட்டில் கால் பங்கு உள்ளது. அவர் வரமாட்டார். அவர் மனைவி சீதை ஆச்சி மட்டும் வாரம் ஒருமுறை அங்கே சென்று வீட்டில் விளக்கேற்றிக் கும்பிட்டு விட்டுத் திரும்புவார்கள்.

வெகு நாட்கள் வரை மாட்டு வண்டிதான் வைத்திருந்தார். கடந்த சில வருடங்களாகத்தான் - அதுவும் ஆடிட்டரின் கட்டாயத்தின் பேரில் கார் வாங்கி வைத்திருக்கிறார். வருமானவரிச் சலுகைக்காக. அந்தக்காரையும் வாரம் ஒருநாள் எடுத்து ஒரு பத்து பதினைந்து கிலோமீட்டர் தூரம்

ஓட்டிவிட்டுக் கொண்டு போய் நிறுத்திவிடுவார். காரைத் தொட்டில் கட்டிப் போட்டு வைக்காத குறைதான். துணி போட்டு மூடி வைத்திருப்பார்.

பெரிய அளவில் வைப்புத் தொகையெல்லாம் வைத்திருப்பதால் உள்ளூர் வங்கியில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு. பாதி நாட்கள் காலைப் பொழுதை அங்கேயே கழித்துவிடுவார். பேனா, பென்சில், பேப்பர், கவர், உள்ளூர் போன் அழைப்புக்கள் என்று எல்லாவற்றையும் வங்கி செலவிலேயே செய்து முடித்து விடுவார்.

இப்படி அவரைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே போகலாம்.

அவர் மனைவி சீதை ஆச்சி ஒரு மாதத்திற்கு முன்பு இறந்து போனார்கள். ஆச்சி தலைவலி, தலைவலியென்று ஆறு மாதங்களாகச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தபோது செட்டியார் கவனிக்காமல் விட்டுவிட்டார். ஆஸ்ப்ரின், அனாஸின், பாரல்டிம், கோடாலித் தைலம், ஜண்டுபாம் என்று செலவைச் சுருக்கியதோடு ஆச்சியின் உயிரையும் சுருக்கி விட்டார்.

ஒரு நாள் தலைவலிப் பிரச்சனை பூதாகரமாகி, ஆச்சியை மதுரைக்குக் கூட்டிக் கொண்டுபோய் நவீன மருத்துவ மனை ஒன்றில் சேர்த்தபோதுதான், மூளையில் கட்டி ஒன்று முற்றிய நிலையில் இருப்பதும், ஆபத்தான நிலைமையும் தெரிய வந்தது. அவசரம் அவசரமாக அறுவை சிகிச்சை செய்தும் பலனளிக்காமல் ஆச்சி அதே மருத்துவமனையில் உயிரை விட்டு விட்டார்கள். ஆச்சியின் கதை மதுரை தத்தனேரி சுடுகாட்டில் முடிந்துவிட்டது..

ஆனால் அதையெல்லாம்விட முக்கியம்- அதிரடியாகக் கருப்பஞ்செட்டியாரின் மனம் மாறியது எப்படி?

அதைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்!

❖❖❖❖❖

சித்திரை வெய்யில் சுட்டெரித்துக்கொண்டிருந்தது. மண்டபத்தில் இருந்து நான் எங்கள் வீட்டிற்குப் போன

போது மணி 12.30 ஆகிவிட்டிருந்தது. வீட்டிற்குள் வெட்கை தெரியவில்லை.

என் தந்தையார் மதிய உணவை முடித்துக்கொண்டு சற்று நேரம் கண் அயர்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும் வா'வென்றார். புன்னகைத்தார். அவர் அருகில் சென்று அமர்ந்தேன். பர்மா பிரம்புப்பாயும், அதன் மேல் விரிக்கப்பட்டிருந்த பட்டு ஜமுக்காளமும் அமர்வதற்கு இதமாக இருந்தது.

வீட்டு விஷயங்களைப் பத்து நிமிடங்கள் பேசிய பிறகு கருப்பஞ் செட்டியாரின் விஷயத்திற்குத் தாவினேன்.

'அவருக்கு என்ன ஆயிற்று?' என்று ஆர்வத்தோடு கேட்டேன்.

என் தந்தையார் நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொன்னார்கள்.

மதுரை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கிற்குப் போகும்முன்பு சீதை ஆச்சி அவர்கள் தன் கணவரிடம் பத்து நிமிடங்கள் வருத்தம் கலந்த கோபத்தோடு பேசினார்களாம். தன் பேச்சால் கருப்பஞ் செட்டியாரை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றிப் போட்டு விட்டார்களாம். அதுதான் ஆச்சி கடைசியாகப் பேசிய பேச்சாம். செட்டியார் ஆடிப்போய் விட்டாராம். அதோடு சிகிச்சை பலனளிக்காமல் ஆச்சி இறந்தும்போய் விட்டதால் அதிர்ந்தும் போய் விட்டாராம்.

ஆச்சி பேசிய பேச்சை ஆச்சி பேசிய தொனியோடு என் தந்தையார் பின் வருமாறு சொன்னார்கள்.

"காசு காசென்று காசைக் கட்டிகொண்டு அழுகிறீர்களே- அந்தப் பெரிய டாக்டர் என்ன சொன்னார் பார்த்தீர்களா? ஆரம்பத்திலேயே பார்த்திருந்தால் குணப்படுத்தியிருக்கலாம் என்றாரா இல்லையா? சாவிற்கு நான் ஒன்றும் பயப்படவில்லை. விதி முடிந்தால் போய்ச்சேர வேண்டியதுதான். ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்- மனிதன் செத்துப்போனால்- பட்டினத்தார் சொன்ன மாதிரி காது ஒடிந்த ஊசி கூடக் கூட வராது. எல்லாம் இருக்கும்

வரைதான். உடன் வருவது அவனவன் செய்த பாவ, புண்ணியம் மட்டும்தான். மனிதனாகப் பிறந்தவனுக்குத் தர்ம சிந்தனை வேண்டும். அது உங்களிடம் துளி அளவுகூட இல்லை. ஏதோ போன ஜென்மத்தில் வாங்கி வந்த வரத்தால் நீங்கள் நகரத்தார் குடும்பத்தில் பிறந்தீர்கள். என்னைப்போன்ற அன்பான, அனுசரணையான மனைவி உங்களுக்குக் கிடைத்தது. கீரையும் சோறும்தான் என்றாலும் சொந்த வீட்டில் சாப்பிட்டீர்கள். ஆனால் இந்தப் பிறவியில் நகரத்தார்களுக்கே உரிய தர்ம சிந்தனையோடு எந்தக்காரியமும் நீங்கள் செய்யவில்லை. அதனால் அடுத்த ஜென்மத்தில் உங்களுக்கு இதெல்லாம் ஒன்றுமே கிடைக்காது. வாங்கித்தான் குடிக்கவேண்டும்!"

இந்த 'வாங்கித்தான் குடிக்கவேண்டும்' என்ற சொற்கள்தான் செட்டியாரின் மனதை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறதாம். திரும்பத் திரும்ப எதிரொலித்துக் கொண்டிருக்கிறதாம்.

மன மாற்றத்திற்கும் அதுதான் காரணமாம்.

'வாங்கிக்குடித்தல்' என்னும் சொல் செட்டிநாட்டிற்கே- செட்டிநாட்டிற்கு மட்டுமே தெரிந்த சொல். பிச்சை எடுத்து உண்ண வேண்டும் என்பது அதன் பொருள்.

இறக்கும் தருவாயில் இருக்கும் ஒருவர் சொல்லும் சத்தியமான வார்த்தைகளுக்கு என்ன வலிமை உண்டு என்பது எனக்கு அப்போதுதான் புரிந்தது

கண்களில் நீர் மல்கி விட்டது!

# 4 ஆயா வீடு

ஆயா இறந்து விட்டார்கள்

எண்பத்தெட்டு வயதுவரை வாழ்ந்திருந்த அந்த நல்ல ஜீவன் அடங்கிவிட்டது

செய்தி தெரிந்த சில மணி நேரங்களிலேயே அருண் புறப்பட்டுவிட்டான்.

நியூயார்க்கில் தான் வேலை பார்க்கும் மிகப்பெரிய நிறுவனத்தில் விடுப்பு வாங்கிக்கொண்டும் - சாதாரண விமானப் பயணச்சீட்டுக் கிடைக்காததால், ஒரு டிராவல் ஏஜெண்டைப் பிடித்து அதிக செலவில் மேல் வகுப்பு விமானப் பயணச்சீட்டை வாங்கிக்கொண்டும் - அவசியம் போக வேண்டுமா என்று கேள்வி எழுப்பிய தன் மனைவி செல்வியை, அவள் சப்தநாடியும் ஒடுங்கும்படி ‘உனக்கென்ன தெரியும்?’ என்று அடக்கியதோடும். புறப்பட்டு விட்டான்

சென்னைக்கும் தகவல் கொடுத்திருந்தான். ஆயாவிற்கு நான் அஞ்சலி செலுத்த வேண்டும் - புறப்பட்டு வருகிறேன் -. நான் வந்து சேரும்வரை காத்திருங்கள் என்று சொல்லியிருந்தான். அவனுடைய பெரிய அம்மானும் சரியென்றிருந்தார்.

பயணம் செய்து வந்தபோது, வழியெங்கும் ஆயாவைப் பற்றிய பல நினைவுகள் ‘குறும் படங்கள்’ போல அவன் மனதில் ஓடி முடிந்திருந்தன. ஒரு பட விழாவையே தொடர்ந்து இரண்டு தினங்கள் பார்த்த மன அழுத்தம் அவன் மனதில் ஏற்பட்டிருந்தது.

சின்ன வயதில் - அதாவது நான்கு வயது முதல் பன்னிரெண்டு வயதுவரை - ஆயாவீட்டில் தான் வளர்ந்த காலத்தில் - தான் பார்த்த ஆயாவை அவனுக்கு நன்றாக நினைவிருந்தது. பாதகாணிக்கைப் படத்தில் வரும்

M.V.ராஜம்மாவைப் போல ஆயா அழகாக இருப்பார்கள். அன்பாகப் பேசுவார்கள். தூக்கிவ்ாரிக் கொஞ்சி முத்தமிடுவார்கள். அவர்களுக்கு எத்தனையோ பேரன், பேத்திகள் இருந்தாலும் அருண்மேல் அலாதிப் பிரியம். சிவப்பாகத் துறுதுறுவென்று இருக்கிறான் என்று சந்தோஷப்படுவார்கள். இவன் திருவோண நட்சத்திரம் - பெருமாளின் நட்சத்திரம் - பெருமாளைப் போலவே பணக்காரனாக இருப்பான் என்பார்கள்.

அந்தக்காலக் கட்டத்தில் எவ்வளவோ கதைகள் சொல்லியிருக்கிறார்கள். எத்தனை குரங்குக் கதைகள், எத்தனை காக்காக் கதைகள், எத்தனை புராணக் கதைகள், எத்தனை நீதிக் கதைகள் - எல்லாம் அற்புதமானவை!

ஆயா ஒரு கதைச்சுரங்கம். இத்தனைக்கும் எட்டாவதுவரைதான் படித்தவர்கள். எல்லாம் கேள்வி ஞானத்தால், மனதில் தக்கவைத்துகொண்டதால் ஏற்பட்டவை.

சில கதைகளை ‘மெட்டி ஒலி’ ஸீரியலைப்போல தொடர்ந்துவேறு சொல்வார்கள்.- அதுவும் சுவை குறையாமல் குரலை ஏற்றி இறக்கி ஒரு கைதேர்ந்த பேச்சாளரைப்போலச் சொல்வார்கள்.

சின்ன வயதில் குரங்குக்கதைகள் என்றால் அருண் விரும்பிக்கேட்பான். சொன்னதையே திருப்பிச் சொன்னாலும் சலிக்காமல் கேட்பான். சில கதைகள் பாட்டுக்களோடு இருக்கும். ஒரு பாட்டு இன்னமும் அருண் காதுகளில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

**“ஆயா சொன்ன குரங்கே!**
**அள்ளி அள்ளி முழுங்கே!**
**உரைத்தால் மோரைக் குடி!**
**உரைக்காவிட்டால் மிளகாயைக் கடி!”**

இது வீட்டிற்குள் வந்துவிட்ட குரங்கிற்குப் பேரன் சோறு போட்ட கதையில் வரும் பாட்டு. இதையெல்லாம் ஆயாவே இட்டுக் கட்டிப் பாடுவார்கள்.

இந்த தமிழ் ஞானமெல்லாம் இந்தக்காலத்துப் பெண்களுக்கு எங்கே இருக்கிறது என்று அருண்

நினைத்துக்கொள்வான். ஆயாவின் பெருமைகளை இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ப்ராங்ஃபர்ட் வழியாக முதலில் மும்பைக்கு வந்து, அங்கிருந்து கனெக்டிங் ப்ளைட்டைப் பிடித்து சென்னைக்கு அவன் வந்து சேர்ந்தபோது காலதேவன் மேலும் 28 மணி நேரங்களைச் சாப்பிட்டு முடித்திருந்தான்.

அப்போது காலை மணி 7.45. விமான நிலையத்தில் அவன் நண்பன் சின்னா என்னும் சின்ன வீரப்பன் அவனுக்காகத் தன் காருடன் காத்துக் கொண்டிருந்தான். ஒரு பட்டுச் சேலையையும், ஒரு பெரிய ரோஜா மாலையையும் வாங்கி வைத்திருந்தான்.

அருண் நேராக திருவொற்றியூர் போய்ச்சேர்ந்தான்

ஆயாவின் முகத்தைப் பார்த்ததும் நிலை குலைந்து போய்க் கதறி அழுதான். எல்லோரும் சமாதானப் படுத்த பட்டுச்சேலையையும், மாலையையும் போட்டு அஞ்சலியைச் செய்து முடித்தான். மற்ற சடங்குகள் எல்லாம் நடந்தேற அடுத்த அரை மணி நேரத்திற்கெல்லாம் ஆயாவின் பூதவுடலுக்கு எரியூட்டப்பட்டது

❖❖❖❖❖

சென்னையில் இருக்கும் சொந்த பந்தங்கள், மற்றும் கேதத்திற்காக வந்திருந்த உறவினர்கள் அனைவருக்கும் புரசைவாக்கத்தில் இருக்கும் பெரிய அம்மான் வீட்டில் மதிய உணவு வழங்கப்பட்டது. மொட்டை மாடியில் ஷாமியானா போட்டிருந்தார்கள். மொத்தம் நூறு பேர் வந்திருந்தார்கள்.

மாலை நான்கு மணிக்கெல்லாம், முக்கால்வாசிப் பேர் போய்விட்டார்கள்.

ஒரு குட்டித்தூக்கம் போட்டுவிட்டு எழுந்த அருண், முகத்தைக் கழுவி உடைகளை மாற்றிக்கொண்டு, கையில் தேநீர் கோப்பையுடன், பெரிய அம்மானையும் அழைத்துகொண்டு மொட்டைமாடிக்கு வந்தவன், தேநீரை அருந்தியபிறகு பெரிய அம்மானுடன் பேச ஆரம்பித்தான்.

“ஊரில் உள்ள உங்கள் பெரிய வீட்டை விற்கப் போவதாகக் கேள்விப் பட்டேன்- உண்மைதானா?”

“ஆமாம்!”

“அதையேன் விற்கவேண்டும்? இத்தனைபேர் இருக்கிறீர்களே பராமரித்து வைத்துக்கொள்ளலாமே- என்ன செலவாகும் சொல்லுங்கள் - வேண்டும் என்றால் நான் தருகிறேன்!”

மாமா தலையையாட்டி மறுத்தார். வருத்தத்துடன் பேச ஆரம்பித்தார்.

“என் தம்பிகளுக்கும், எங்கள் மூவரின் பிள்ளைகளுக்கும் அதைப் பராமரித்து வைத்துக்கொள்வதில் விருப்பமில்லை. ரிப்பேர் செய்தால் பதினைந்து லட்ச ரூபாய் செலவாகும். அதற்கு என்ன ரிட்டர்ன் இருக்கு என்கிறார்கள். ஊரின் புதுக் காலனிப் பகுதிகளில் அவரவர்கள் கட்டியுள்ள சின்ன வீடுகளே போதும், இல்லாதவர்கள் கட்டிக்கொள்ளலாம் என்கிறார்கள். ஸ்டேட்டஸ் பிரச்சனை, பணப்பிரச்சனை, ஈகோ பிரச்சனை என்று வீட்டிலுள்ள தூண்களைவிட இவர்களுடைய பிரச்சனைகள்தான் அதிகம். அதனால்தான் விற்றுவிடுவது என்று முடிவு செய்திருக்கிறோம்”

“வீட்டை வாங்கிக் கொள்வதற்கு ஆள் பார்த்துவிட்டீர்களா?”

“ஆமாம், இரண்டு பேர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். யார் முழுதாகப் பணத்தைக் கிரயத்தன்று தர ஒப்புக்கொள்கிறார்களோ அவருக்குக் கொடுத்துவிட வேண்டியதுதான். அவர்கள் மேங்கோப்பைப் பிரித்து மரங்களையெல்லாம் விற்றுக் காசாக்கிவிட்டு இடத்தை ஃப்ளாட் போட்டு விற்று விடுவார்கள். இடமும் தோட்டமும் மட்டுமே அரை ஏக்கர் பரப்பளவு!”

“என்ன விலை என்றால் கொடுப்பதாக இருக்கிறீர்கள்?”

“ஐம்பது லட்சம் என்று முடிவு செய்திருக்கிறோம்.”

“சரி, அந்த ஐம்பது லட்சத்தை நான் தருகிறேன். எனக்குக் கொடுத்து விடுங்கள்!”

மாமா திகைத்துப் போய் விட்டார்.

"என்ன அருண் சொல்கிறாய்? உங்களுக்குத்தான் நம் ஊரில் இரண்டு வீடுகள் இருக்கிறதே - அதுவும் உன் பெற்றோர்களுக்கு நீ ஒரே பிள்ளை இந்த வீடு எதற்கு? உன் தாயார், தகப்பனார் ஒப்புக்கொள்வார்களா?"

"அவர்களை நான் சரி பண்ணிக் கொள்கிறேன். புதுப்பிக்கும் வேலையையும் ஆட்களை வைத்து நான் பார்த்துக்கொள்கிறேன்"

"ஒன்றை மட்டும் சொல் அருண்! அவ்வளவு பெரிய வீட்டை வாங்கி நீ என்ன செய்யப் போகிறாய்?"

அருண் உணர்ச்சிப் பிழம்பாக மாறிப் பேச ஆரம்பித்தான்

"அது ஆயா பல காலம் வாழ்ந்த வீடு .-ஆட்சி செய்த வீடு. அந்த வீட்டிலுள்ள ஒவ்வொரு தூணும், ஒவ்வொரு பட்டியக்கல்லும் ஆயா வாழ்ந்த வாழ்க்கையைச் சொல்லும் அந்த வீடு. இடிபடக்கூடாது மாமா - இடிந்து தரை மட்டமாகக்கூடாது மாமா - அதுதான் என் நோக்கம்!"

இந்த இடத்தில் சற்று நிறுத்திய அருண், தன்னுடைய கைப்பையில் இருந்து செக் புத்தகம் ஒன்றை எடுத்துக் கையெழுத்தைப் போட்டு அதை நிரப்பிக் கொள்ளும்படி சொல்லி, எழுந்து நின்று தன் மாமாவின் கையில் கொடுத்தான்.

அதை அவன் மாமா வாங்கிகொண்டவுடன், அவரை விழுந்து வணங்கினான். அடுத்த இருபது நிமிடங்களில் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு கேதத்திற்காக வந்திருந்த தன் தாய் தந்தையருடன் புறப்பட்டு விட்டான். அன்று இரவே அவன் அமெரிக்காவிற்குத் திரும்பி விட்டான்.

அவனுடைய வேகத்திற்கு ஆயாவின் ஆத்மாவும் ஒத்துழைத்தது போலும் எல்லாம் ஜெட் வேகத்தில் நடந்து முடிந்தது.

அவன் ஆருயிர் நண்பன் சின்னாவின் உதவி மற்றும், மேற்பார்வையாலும், அருண் மேலும் செலவழித்த இருபது லட்ச ரூபாய் பணத்தாலும் அவனுடைய ஆயா வீடு